| O.S.No. 64/2023 | DW2: திருமதி. உமாமகேஷ்வரி<br>க/பெ. திரு. கண்ணன் | 10-02-2026 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

1. நான் இந்த வழக்கில் 1–ம் பிரதிவாதி ஆவேன். 14–ம் பிரதிவாதி என் கணவர். தாவா B ஷெட்யூல் சொத்து 3 ஏக்கர் 95 சென்ட் ஆகும். தாவா B ஷெட்யூல் சொத்தை எனது தந்தை வழி பாட்டி கண்ணம்மாள் 1974–ல் கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். எனது தாத்தா பெயர் சின்னகண்ணு முதலியார். எனது தாத்தா பெயர் சின்னகண்ணு முதலியாருக்கு கண்ணியப்பன், சுப்பிரமணி, அண்ணாமலை மற்றும் ராஜவேல் வாரிசுகள் ஆகும். அதில் இரண்டாவது மகன் ராஜவேல் சென்னையில் குடியேறிவிட்டார் என்றால் சரிதான். கண்ணிய்யப்பனுக்கு 2 மகன்கள், 2 மகள்கள் வாரிசுகள் ஆகும். 2–ம் வாதி வெங்கடேசன் கண்ணியப்பனின் மகன் ஆவார். நான் சுப்பிரமணியின் ஒரே மகள். அண்ணாமலைக்கு 5 மற்றும் 2, 3 பிரதிவாதிகள் வாரிசுகள் ஆவோம்.

2. எனது பாட்டி கண்ணம்மாள் அவருக்கு சொந்தமாக சொத்தான 3 ஏக்கர் 95 சென்ட்டில் பொதுவில் 1 ஏக்கர் 30 சென்ட்டினை 2–ம் வாதிக்கு தான செட்டில்மென்ட் பத்திரம் எழுதி வைத்தார் என்றால் சரிதான். அதேபோல், எனக்கும் பொதுவில் 1 ஏக்கர் 30 சென்ட்டினை தான செட்டில்மென்ட் பத்திரம் எழுதி வைத்தார். மற்ற 4 பேருக்கும் சேர்த்து பொதுவில் 1 ஏக்கர் 35 சென்ட்டினை எனது பாட்டி தான செட்டில்மென்ட் பத்திரம் எழுதி வைத்தார். அவ்வாறு செட்டில்மென்ட்படி வந்த சொத்தினை நான், 2 முதல் 5 பிரதிவாதிகள் ஊர் பஞ்சாயத்தார் முன்னிலைக்கு வாய்மொழியாக பாகப்பிரிவினை செய்து கொண்டோம் என்றால் சரிதான். அந்த சமயம் நாங்கள் அனைவரும் மைனர்கள். பின்னர், நாங்கள் கூட குறைய அனைவரும் பயிர் வைத்து வந்தோம்.

3. அதில் 2–ம் வாதி வெங்கடேசனுக்கு மேலண்டை வடமேற்கு பக்கம் 1 ஏக்கர் 30 சென்ட் பாகம் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். கிணற்றில் அனைவருக்கும் பொதுவில் 3–ல் 1 பாகம் உரிமை உள்ளது. அந்த கிணற்றுக்கு 2–ம் வாதி விவசாய பம்பு செட் போட்டுள்ளார் என்றாலும், 2–ம் பிரதிவாதியும் பம்பு செட் போட்டுள்ளார் என்றால் சரிதான். எனக்கு வந்த பாகத்தினை 5 பேருக்கும் மனைகளாக விற்பனை செய்தேன் என்றால் சரிதான். அதன் சர்வே எண். 96 ஆகும். எனக்கும் 2–

ம் பிரதிவாதிக்கும் ஒதுக்கப்பட்ட பாகத்திற்கு கிழக்கு பக்கம்தான் 2 முதல் 5 பிரதிவாதிகளின் பாகம் உள்ளது என்றால் சரிதான். 2 முதல் 5 பிரதிவாதிகளும், அவர்களுக்கு வந்த பாகத்தில் ஒரு பகுதியினை 3 நபர்களுக்கு மனைகளாக விற்பனை செய்துள்ளார்கள் என்றால் சரிதான். அதேபோல், 3-ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்ட சொத்தை தசரதனும், குமாரும் அவர்களுக்குள் பரிவர்த்தனை செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். அதேபால், 4-ம் பிரதிவாதி குமார் 3-ம் பிரதிவாதிக்கு 1,043 சதுர அடி மனையை கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அதேபோல் 4-ம் பிரதிவாதி 11-ம் பிரதிவாதிக்கு 1,043 சதுர அடி மனையை கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அதேபோல், 3-ம் பிரதிவாதி தசரதன் 12-ம் பிரதிவாதிக்கு 1,043 சதுர அடி மனையை கிரையம் கொடுத்தார் என்றால் சரிதான்.

4. என்னிடம் மனை வாங்கிய 8, 9, 10, 13 பிரதிவாதிகள் அதில் அவர்கள் வீடு கட்டி வசித்து வந்தார்கள் என்றால் சரிதான். குமாரிடம் கிரையம் வாங்கிய 7-ம் பிரதிவாதி கிருஷ்ணனும் அதில் வீடு கட்டி வசித்து வருகிறார் என்றால் சரிதான். 4-ம் பிரதிவாதியிடம் கிரையம் பெற்ற 11-ம் பிரதிவாதி அதில் வீடு கட்டி வசித்து வருகிறார் என்றால் சரிதான். 3-ம் பிரதிவாதியிடம் கிரையம் பெற்ற 12-ம் பிரதிவாதி அதில் வீடு கட்டி வசித்து வருகிறார் என்றால் சரிதான். 2-ம் வாதி வெங்கடேசன் அவருக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் வீடு கட்டி 15 ஆண்டுகளாக வசித்து வருகிறார் என்றால் சரிதான். 2-ம் வாதி அவருக்கு ஒதுக்கப்பட்ட சொத்தில்தான் பயிர் வைத்துக்கொண்டும், வீடு கட்டியும் வசித்து வருகிறார் என்றால் சரிதான். 2-ம் வாதி வீடு கட்டும்போது நானும், 2 முதல் 5 பிரதிவாதிகள் எந்த ஆட்சேபணையும் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி கிரையங்கள் அனைத்தும் நான்கு எல்லைகள் குறிப்பிட்டு கிரைய பத்திரம் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். 3-ம் பிரதிவாதி 4-ம் பிரதிவாதிக்கு எழுதிய பரிவர்த்தனை பத்திரத்திலும், 4-ம் பிரதிவாதி 7-ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்த கிரைய பத்திரத்திலும், 5-ம் பிரதிவாதி 2-ம் பிரதிவாதிக்கு எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணத்திலும் 2-ம் வாதி வெங்கடேசன் பாகத்திற்கு தெற்கு என்று நான்கு எல்லை எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். நாங்கள் விற்பனை செய்த 40 செண்ட் போக மீதம் 1 ஏக்கர் 10 செண்ட் உள்ளது.

5. எனக்கு ஒதுக்கப்பட்ட சொத்தில் 1, 2 வாதிகள் 26 சென்ட்டினை ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள். அந்த இடம் நிலமாகத்தான் உள்ளது. 26 சென்ட்டினை வாதிகள் ஆக்கிரமித்துள்ளார்கள் என்று அவர்களுக்கு சட்ட அறிவிப்போ, அவர்களுக்கு எதிராக வழக்கோ நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அவர்கள் ஆக்கிரமிப்பு செய்துள்ள விஷயம் கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்னர் சொத்தினை அளந்து பார்க்கும்போதுதான் தெரியவந்தது. வாதிகள் அவர்களுக்கு சொந்தமான 1 ஏக்கர் 30 சென்ட்டினை சர்வேயரை வைத்து அளந்து அத்துகாட்டினார் என்றாலும், அதனை நாங்கள் ஒப்புக்கொள்ளவில்லை என்றாலும் சரியல்ல. வாதிகள் எந்த காலத்திலும் சொத்தினை அளக்கவில்லை, நாங்கள்தான் அளந்தோம். சர்வேயர் அளந்து கொடுத்த அறிக்கை வரைபடத்தை தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை, ஆனால் எங்களிடம் உள்ளது.

6. எங்களுக்கு ஒதுக்கப்பட்ட 1 ஏக்கர் 30 சென்ட்டிற்கு இரண்டு பக்கமும் தெரு உள்ளது என்றால் இல்லை, மேற்கு பக்கம் மட்டுமே தெரு உள்ளது. மொத்த சொத்திற்கும் வடவண்டை பக்கம் ஒரு குளக்கரை பாட்டை உள்ளது என்றால் சரிதான். வாதிகள் முறையாக பாகப்பிரிவினை செய்து பதிவு செய்து கொள்ளலாம் என்று அழைத்தபோது நான், 2, 3 பிரதிவாதிகள் அதற்கு ஒத்துழைக்கவில்லை என்றால் சரியல்ல. 2-ம் வாதிக்கு ஒதுக்கப்பட்ட சொத்திற்கு அவர் அனுபவித்து வந்ததின் அடிப்படையில சர்வே எண். 96/23A2 என்று உட்பிரிவு செய்யப்பட்டு வட்டாட்சியரால் பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான், அதனை நாங்கள் ஆட்சேபணை செய்து மீண்டும் பழைய நிலைக்கு பட்டா மாற்றம் செய்யப்பட்டது.

7. 2-ம் வாதிக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் 20 சென்ட்டினை நான் நாமகார்த்தமாக என் கணவர் பெயரில் 27-07-2021-ல் ஒரு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்தேன் என்றாலும், அது சட்டப்படி செல்லாது என்றாலும் சரியல்ல, அது எனக்கு சொந்தமான சொத்து, அதனால் எழுதி வைத்தேன். 2-ம் வாதி பெயரில் வழங்கப்பட்ட தனிப்பட்டாவை ரத்து செய்தது சம்மந்தமாக அவர் வருவாய் கோட்டாட்சியரிடம் மேல்முறையீடு செய்துள்ளார் என்றால் அவ்வாறு எந்த அறிவிப்பும் எங்களுக்கு வரவில்லை.

8. 2-ம் வாதி வடமேற்கு எல்லையில் உள்ள 1 ஏக்கர் 30 சென்ட்டினை அனுபவித்து வருவதில் எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் சரியல்ல, ஆட்சேபணை உள்ளது. கிணற்றில் நாங்கள் பாசனம் இறைப்பதை 2-ம் வாதி தடை செய்ததில்லை என்றால் நிறைய முறை தடை செய்துள்ளார். 2, 4 பிரதிவாதிகள் 2-ம் வாதி நீர்பாசணம் செய்வதை தடை செய்ததால் அவர்கள் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்று சொன்னால் சரிதான், நாங்களும் புகார் கொடுத்துள்ளோம். 2-ம் வாதி வெங்கடேசன் அவருக்கு ஒதுக்கப்பட்ட சொத்தினை 1-ம் வாதி தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்தார் என்றால் இந்த வழக்கு தாக்கல் செய்தபின்புதான் அதுபற்றி தெரியும். 2-ம் வாதி அவருக்கு ஒதுக்கப்பட்ட சொத்தினை அனுபவித்து வந்து முறையாக 1-ம் வாதிக்கு தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்தார் என்றால் வாய்வார்த்தையாகத்தான் அச்சொத்து ஒதுக்கப்பட்டது. அதனால், தாவா A ஷெட்யூல் சொத்து வாதிகளுக்கு சொந்தமானது என்றாலும், அதில் நாங்கள் எவ்வித உரிமையும் கோர முடியாது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை** : இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு
சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு,
சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VIGNESH PRABU

Ex. P6
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.02.10 13:46:16 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**